## திராவிட இயக்க இதழ்கள் – ஞாயிறு




திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களில் ஒருவரான ஏ.கே.வேலன் என்று அறியப்படும் அருணாச்சலம் குழந்தைவேலன், அடிப்படையில் வசனகர்த்தா. ‘தை பிறந்தால் வழி பிறக்கும்’ படத்தின் இயக்குநர் மற்றும் தயாரிப்பாளர். அவர் ஆசிரியராக இருந்து நடத்திய இதழ், ‘ஞாயிறு’.

மாதம் இருமுறை ஏடாக வெளிவந்த அந்த இதழின் ஆரம்பகாலப் பெயர் ‘எரிமலை’. திராவிட இயக்கக் கொள்கைகளைப் பரப்ப அந்த இதழை நடத்தினார். ஆனால், அந்த இதழை தீவிரவாத ஏடாக அப்போதைய அரசு கருதியது. எனவே, இதழுக்கு ஜாமீன் தொகை கட்டுமாறு வேலன் நிர்ப்பந்திக்கப்பட்டார்.

அந்தத் தொகையைக் கட்ட இயலாத காரணத்தால், அதனை ‘ஞாயிறு’ எனும் இலக்கிய ஏடாக மாற்றி நடத்தினார். அதற்காக ‘ஞாயிறு அச்சகம்’ என்ற அச்சகத்தையும் நிறுவினார். மற்றொரு தி.மு.க தலைவரான டி.கே. சீனிவாசன், ’தாமரை செல்வன்’ என்ற புனைப்பெயரில் அந்த இதழின் இணை ஆசிரியராகப் பணியாற்றினார். 1951-ஆம் ஆண்டு வாக்கில், தஞ்சையிலிருந்து அந்த இதழ் வெளிவந்தது.

## ஃப்ளாஷ்பேக்





கோ.குருசாமி

### மூன்று முறை நிதி!

1976-ஆம் ஆண்டு நெருக்கடி நிலையின் போது தலைவர் கலைஞர் அவர்கள் ‘மிசா வழக்கு நிதி’ அளிக்குமாறு கழகத் தோழர்களுக்கு அழைப்பு விடுத்தார். அப்போது நான் என்னால் முடிந்த தொகையை, கோபாலபுரம் தலைவர் வீட்டுக்கு நேராகச் சென்று மூன்று முறை தலைவர் கையில் கொடுத்து வந்தேன். அப்படியான தருணத்தில் எடுத்துக் கொண்ட புகைப்படம் இது. இந்த நினைவுகள் எல்லாம் மனதை விட்டு அகலாமல் அப்படியே உள்ளன.

–கோ.குருசாமி, டாக்டர் அம்பேத்கர் தெரு, பொன்னேரி, திருவள்ளூர்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### அண்ணாவின் எச்சரிக்கை!

1963-இல் ஒன்றிய உள்துறை அமைச்சராக இருந்த லால் பகதூர் சாஸ்திரி, நாடாளுமன்றத்தில் இந்தி ஆட்சிமொழி மசோதாவைத் தாக்கல் செய்தார். தமிழ்நாடே கொதித்துப்போனது. மாநிலங்களவையில் இதுகுறித்துப் பேசிய பேரறிஞர் அண்ணா, “இதனால் ஏற்படும் விளைவை எண்ணி, நான் அஞ்சப் போவதில்லை. அரசியலில் மெதுவாகச் செல்பவன் நான். அவசரமாகப் போய் குழியில் விழ மாட்டேன். அதற்காக பயந்தவன் என்று எண்ணிவிட வேண்டாம். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் 4 ஆண்டுகள் அல்ல 40 ஆண்டுகள் என்றாலும், சிறைக்குப் போகத் தயார்” என்று எச்சரித்தார்.

## முதன் முதலில் 5

ந.வினோத்குமார்

**திராவிட இயக்க அடையாளங்களை, நடைமுறைகளைப் பற்றி விளக்கும் ‘திராவிட மரபு’ தொடர் இது...**

# கண்கவரும் கண்காட்சி!












திராவிட இயக்க மாநாடுகளில் உள்ள சிறப்புகளில் ஒன்று, மக்களை உற்சாகமாக வைத்திருப்பது. வெறுமனே மேடையில் பேசும் தலைவர்களை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்தால், ஒரு கட்டத்தில் அலுப்பும் அயற்சியும் ஏற்பட்டுவிடும். சொல்கிற விஷயங்களும் அவர்களிடம் முழுமையாகச் சென்று சேராது.

எனவே, அவர்களை உற்சாகமாக வைத்திருக்க, நிகழ்ச்சி நிரலில் தலைவர்களின் சொற்பொழிவுகளைத் தொடர்ச்சியாக வைத்திருக்காமல், இடையிடையே நாடகம் நடத்துவது, புத்தகங்கள் வெளியிடுவது, கழகக் கொள்கைப் பாடல்களைப் பாடி இசைக் கச்சேரிகள் நடத்துவது என வழக்கம்.

இவை எல்லாவற்றையும் விட, மாநாட்டு நாட்களின் போது நடைபெறும் கண்காட்சி மிகவும் சிறப்புக்குரியது. அந்தக் கண்காட்சியில், ஓவியங்கள், புகைப்படங்கள், மாதிரி வடிவங்கள் போன்ற விஷயங்கள் இடம்பிடித்திருக்கும். அவை, திராவிட இயக்கத்தின் வரலாற்றை, கொள்கைகளை, போராட்டங்களை, சாதனைகளை, கழக ஆட்சியின் போது கொண்டு வந்த திட்டங்களை எல்லாம் பறைசாற்றும் விதத்தில் அமைந்திருக்கும்.

மாநாட்டில் தலைவர்களின் பேச்சைக் கேட்பதற்காக வரும் மக்களை, இந்தக் கண்காட்சிகள் மனதளவில் தயார்படுத்தும். நாம் எங்கேயிருந்து, என்னென்ன தடைகளைத் தாண்டி, எவ்வளவு போராட்டங்களுக்கு மத்தியில், எப்படிப் பயணித்து இன்றுள்ள நிலையை அடைந்திருக்கிறோம் என்பதை, அந்தக் கண்காட்சிகள் உணர வைக்கும்.

இப்படி மாநாட்டில் கண்காட்சியை அமைக்கும் வழக்கம், சுயமரியாதை இயக்கத்தின் இரண்டாவது மாநில மாநாட்டில் இருந்து தொடங்கியது. அது 1930-ஆம் ஆண்டு மே 10, 11 ஆகிய நாட்களில் ஈரோட்டில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் விவசாயப் பொருள் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

இந்த மாநாட்டுக்கான ஏற்பாடுகள் குறித்து, தந்தை பெரியார் அவர்கள் 1930-ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் தேதியிட்ட ‘குடிஅரசு’ இதழில் எழுதும்போது, “மாநாட்டில் விவசாயப் பொருள் கண்காட்சிசாலை ஏற்படுத்துவதென்றும், கண்காட்சியில் கூடுமான அளவு நவீன முறைகளை விவசாயத்தில் கையாளும் வகைகளை காண்பிப்பதென்றும் தீர்மானிக்கிறது” என்று குறிப்பிட்டுள்ளார்.

**முதல் மாநில மாநாட்டின் போது, ‘பிரயாண முறை வளர்ந்த விதம்’ என்ற தலைப்பில் ஓவியக் கண்காட்சி ஒன்று அமைக்கப்பட்டது.**

தொடர்ந்து, 1931 விருதுநகரில் நடைபெற்ற மூன்றாவது சுயமரியாதை இயக்க மாநாட்டில், நவீன மருத்துவ சிகிச்சை முறைகளை விளக்கும் சுகாதாரக் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

பிறகு, திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்ட பிறகு, சென்னையில் நடைபெற்ற முதல் மாநில மாநாட்டின் போது, ‘பிரயாண முறை வளர்ந்த விதம்’ என்ற தலைப்பில் ஓவியக் கண்காட்சி ஒன்று அமைக்கப்பட்டது. பிறகு, திருச்சியில் நடைபெற்ற இரண்டாவது மாநில மாநாட்டில் பல நாட்டு மக்களுக்காகப் பாடுபட்ட மாவீரர்கள் உத்தமர்கள், அறிஞர்கள் ஆகியோரின் படங்கள் கொண்ட ஓவியக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் பிறகான காலகட்டங்களில், திராவிட இயக்க வரலாற்றைச் சொல்லும் புகைப்படக் கண்காட்சிகள் அமைக்கப்படலாயின.

...அடையாளம் அறிவோம்.

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ் 5

**“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# திராவிடச் சான்றோன் எல்லிஸ்!




‘திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்’ என்ற நூலை எழுதியதால், இன்றளவும் ராபர்ட் கால்டுவெல் சில இன, மத, மொழி விரோதிகளால் எதிர்க்கப்படுகிறார். ஆனால், கால்டுவெல், ‘திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்’ எழுதுவதற்கு 40 ஆண்டுகளுக்கு முன்பே ‘திராவிட மொழிக் குடும்பம்’ என்ற கருத்தை முன்மொழிந்தவர் எல்லிஸ்.

திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர், திருவள்ளுவர் படம் பொறித்த நாணயங்களை வெளியிட்ட அரசு அதிகாரி என்றே அறியப்பட்ட ஃபிரான்சிஸ் ஒயிட் எல்லிஸ், ‘திராவிடம்’ என்ற கருத்தாக்கம் மொழியியல் ரீதியாக வளர்ந்தெழுவதற்கு மூலக்கல்லாக விளங்கினார். இதுவரை பெரிய அளவில் பேசப்படாத இந்த வரலாற்றைப் பல்வேறு சான்றாதாரங்களுடன் ‘திராவிடச் சான்று’ என்ற நூலில் நமக்கு வழங்கியுள்ளார் தாமஸ் ட்ரவுட்மன். இராம. சுந்தரம் அவர்களது மொழி பெயர்ப்பில், சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் இருக்கும் மொழிகள் அனைத்தும் சமஸ்கிருதத்தில் இருந்து கிளைத்தவை என்ற கருத்து, 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கீழைத்தேய (ORIENTALIST) அறிஞர்களால் முன்வைக்கப்பட்டது. நாடு-இனம்-தேசம் என்ற உரையாடலின் பகுதியாக இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கு இடையிலான உறவை வலுப்படுத்தி, ஆரிய இன மேலாண்மையை நிறுவ கல்கத்தாவை மையமாகக் கொண்ட கீழைத்தேயவியல் அறிஞர்கள் முயன்றனர். எவ்வித ஆதாரமுமற்ற இந்தக் கருத்தாக்கத்தை சென்னையை மையமாகக் கொண்ட எல்லிஸ் தலைமையிலான அறிஞர்கள் தரவுகளோடு மறுத்தனர்.

இளநிலை ஆங்கிலேய அதிகாரிகளுக்கு சுதேச மொழிப் பயிற்சி அளிப்பதற்காக 1812-ஆம் ஆண்டு எல்லிஸ் தொடங்கியதுதான் புனித ஜார்ஜ் கோட்டைக் கல்லூரி. மொழிப் பயிற்சி வழங்குவது, கல்லூரியின் ஒரு நோக்கமாக இருந்தாலும், இந்திய மாணவர்களுக்குச் சட்டம் பயிற்றுவிப்பது, திராவிட மொழிகளின் இலக்கண நூல்களை வெளியிடுவது, செவ்வியல் தன்மை கொண்ட இலக்கியங்களை மீட்டெடுத்து வெளியிடுவது போன்றவையும் முக்கிய அம்சங்களாக விளங்கின. இதன் காரணமாக அதே ஆண்டில் சென்னை இலக்கியக் கழகமும் தோற்றுவிக்கப்பட்டது. திராவிட மொழிக் குடும்பம் என்ற கருத்தாக்கம் எல்லிஸ் தலைமையில் செயல்பட்ட புலமையாளர்களின் முயற்சியால் வலுப்பெறத் தொடங்கியது.

**இந்திய மொழிகளுக்கு சமஸ்கிருதம்தான் மையமாக உள்ளது என்ற வாதத்தையும் மறுத்தார்.**

1816-ஆம் ஆண்டு புனித ஜார்ஜ் கோட்டைக் கல்லூரிப் பதிப்பகம் ஏ.டி.கேம்பல் எழுதிய தெலுங்கு இலக்கண புத்தகத்தை வெளியிட்டது. இந்த நூலுக்கு எல்லிஸ் எழுதிய முன்னுரையில், சமஸ்கிருத- தென்னிந்திய மொழிகளுக்கு இடையிலான வேர்ச்சொல் வேறுபாடுகளையும், திராவிட மொழிகளுக்கிடையே நிலவும் ஒற்றுமைகளையும் சுட்டிக்காட்டியதோடு இந்திய மொழிகளுக்கு சமஸ்கிருதம்தான் மையமாக உள்ளது என்ற வாதத்தையும் மறுத்தார்.

ஏழு அத்தியாயங்களில் பெரும் வரலாற்றை நமக்குக் கடத்துகிறது இந்நூல். ஏ.டி.கேம்பலின் இலக்கண நூலுக்கு எல்லிஸின் முன்னுரை, நீ.கந்தசாமி பிள்ளை எழுதிய ‘கால்டுவெலும் அவர் வாழ்ந்த காலமும்’ என்ற சிறு நூலும் பிற்சேர்க்கைகளாக வழங்கப்பட்டுள்ளன.


தன்னுடைய 40 வயது வரை எந்தப் புத்தகத்தையும் வெளியிடப்போவதில்லை என்று உறுதியுடன் இருந்து 41-வது அகவையில் மறைந்த எல்லிஸை ‘திராவிடச் சான்று’ என்ற இந்நூலின் மூலம் ஓரளவுக்கு மீட்டெடுத்துள்ளார் தாமஸ் ட்ரவுட்மன்.

...வாசிப்போம்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

436

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131